**செய்தி வெளியீடு எண்: 705** **நாள்: 03.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (3.10.2018) தலைமைச் செயலகத்தில், இந்தோனேஷியாவின் ஜகர்த்தா மற்றும் பிளமிங் நகரங்களில் ஆகஸ்ட் 18 முதல் செப்டம்பர் 2 வரை நடைபெற்ற 18–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைக்கு 1 கோடியே 10 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும், அவ்வீரர்களின் 3 பயிற்றுநர்களுக்கு 18 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடும் நோக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பன்னாட்டு அளவிலும் அகில இந்திய அளவிலும், நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல், பதக்கம் வெல்லும் வீரர்களின் பயிற்றுநர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, 18–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், தடகளம் கலப்பு 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயம் மற்றும் ஆடவர் 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயம் ஆகிய போட்டிகளில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற திரு. ஆரோக்கிய ராஜீவ் அவர்களுக்கு 60 லட்சம் ரூபாய்க்கான காசோலையினையும்;

பெண்களுக்கான ஸ்குவாஷ் குழுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி சுனைனா குருவில்லா அவர்களுக்கு 30 லட்சம் ரூபாய்க்கான காசோலையினையும்;

டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு.பிரஜ்னேஷ் குணேஸ்வரன் அவர்களுக்கு 20 லட்சம் ரூபாய்க்கான காசோலையினையும்;

மேலும், பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் பயிற்றுநர்கள் திரு.அஞ்சன் சின்னப்பா, திருமதி டிம்பிள் மதிவாணன் மற்றும் திரு.அமிஷ் வேத் ஆகிய 3 பயிற்றுநர்களுக்கு 18 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்;

என மொத்தம், 1 கோடியே 28 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளைப் பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 3.10.2018**